<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.
<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

**அ.வ.எண் – 20/2007**
<u>வாக்குமூலம் – பி.வா.சா–: 2</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **ரவி (DW– 2)** | | : | |
| த/பெ. | : | நடராஜ் | தொழில் | : | மில் தொழிலாளி |
| கிராமம் | : | கிருஷ்ணாபுரம் | வயது | : | 46 |
| தாலூக்கா | : | திருப்பூர் | நாள் | : | 04.06.2026 |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2026 ஆண்டு ஜீன் வியாழக்கிழமை 04ம் நாள் சாட்சியம்.

---

**<u>சாட்சி ஆஜர். இ.ம.எண்.05/2026 அனுமதிக்கப்பட்டு சாட்சி வரவழைக்கப்பட்டு சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை – DW – 2</u>**

1. இந்த வழக்கில் நான் 4ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் ஆஜராகி எதிர்வாதத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கை புஷ்பவதி என்பவர் தாக்கல் செய்துள்ளார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதியான தனலட்சுமிக்கும் எனக்கும் என்ன உறவு என்றால் என்னுடைய தாயார். தனலட்சுமி இந்த வழக்கில் ஒரு தரப்பினராக உள்ளாரா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. 3ம் மற்றும் 5ம் பிரதிவாதிகள் ஆன வேணுகோபால் மற்றும் மோகன்ராஜ் என் உடன் பிறந்தவர்களா என்றால் என்னுடைய உடன் பிறந்தவர்கள். 6ம் பிரதிவாதியான முருகானந்தம் என்னுடைய சித்தப்பா என்றால் சரிதான். புஷ்பம் என்னுடைய அத்தை என்றால் சரிதான்.
2. எங்களது குடும்பத்தில் கடந்த 2003ஆம் ஆண்டு சொத்து பிரச்சனை ஏற்பட்டு ஒரு குடும்ப ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. மேற்கண்ட குடும்ப ஒப்பந்தத்தின் அடிப்படையில் எனது சித்தப்பாவான 6ம் பிரதிவாதி ஒரு வழக்கை தாக்கல் செய்து உள்ளார் என்றால் அதைப் பற்றி

எனக்கு தெரியாது. 6ம் பிரதிவாதி தாக்கல் செய்த வழக்கில் நான் ஒரு தரப்பினராக உள்ளேன் என்றாலும் அந்த வழக்கில் நான் ஆஜராகாமல் உள்ளேன் என்றாலும் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 6ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள வழக்கில் எனது தாயார் தனலட்சுமி, வேணுகோபால் மற்றும் மோகன்ராஜ் ஆஜராகி எதிர்வாதத்தை தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

3. 6ம் பிரதிவாதி தாக்கல் செய்த வழக்கில் நான் தனியாக வழக்கறிஞர் நியமனம் செய்து வழக்கை நடத்தினேனா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. கடந்த 2003 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட குடும்ப ஒப்பந்தத்தில் எனது பாட்டனார் பெரியசாமி நாயுடு, பாட்டி வேலம்மாள், அத்தை புஷ்பவதி, சித்தப்பாக்கள் கனகராஜ் மற்றும் முருகானந்தம் மற்றும் நான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. சாட்சியிடம் பி.வா.சா.ஆ.1 காண்பிக்கப்பட்டு அதில் உள்ள கடைசி கையெழுத்து தன்னுடையதா என்று கேட்டதற்கு சாட்சி தன்னுடைய கையெழுத்து இல்லை என்ற சாட்சியம் அளித்தார். சாட்சியிடம் சாட்சிய அழைப்பாணைக் காட்டப்பட்டு அதில் உள்ள கையெழுத்து தன்னுடையதா என்று கேட்டதற்கு சாட்சி தன்னுடையது அல்ல என்று சாட்சியம் அளித்தார்.

4. சாட்சிய அழைப்பாணையில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் நான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து என்றாலும் தற்பொழுது வழக்குக்காக வேண்டி நான் என்னுடைய கையெழுத்து இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சாட்சியிடம் பி.வா.சா.ஆ.1 காட்டப்பட்டு அதில் உள்ள மற்ற கையெழுத்துக்கள் யாருடைய கையெழுத்துக்கள் என்று கேட்டதற்கு சாட்சி அதைப்பற்றி எனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்தார். பி.வா.சா.ஆ.1ல் உள்ள அனைத்து கையெழுத்துகளும் யாருடையது என்ற விவரம் எனக்கு நன்றாக தெரியும் என்றாலும் தற்பொழுது வழக்குக்காக வேண்டி தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

5. அந்தியூரை சார்ந்த கோவிந்தராஜன் மகனான ஏ. பி செல்வராஜ் யார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. சடையகவுண்டன்புதூரை சார்ந்த காளியப்ப கவுண்டரின் மகன் அமிர்தலிங்கம் யார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. அந்தியூர் கிராமத்தைச் சார்ந்த சுப்பாநாயுடுவின் மகன் தேவராஜ் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கணபதி பாளையத்தை சார்ந்த வேலுச்சாமி மகன் செந்தில்குமார் யார் என்றால் என்னுடைய அத்தையின் மகன் அவர். மேற்கண்ட செந்தில்குமார் வாதி புஷ்பத்தின் மகன் என்றால் சரிதான். மேற்கண்ட நபர்களின் முன்னிலையில் தான் நாங்கள் பி.வா.சா.ஆவணத்தில் கையெழுத்து செய்துள்ளோம் என்றாலும் தற்போது வழங்கிற்காக வேண்டி அவ்வாறு செய்யவில்லை என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.
6. என்னுடைய தாயார் தனலட்சுமிக்கும் என்னுடைய சகோதரர்கள் மோகன்ராஜ் மற்றும் வேணுகோபாலுக்கும் இடையே ஏதேனும் விரோதம் உள்ளதா என்றால் பேச்சுவார்த்தை இல்லை. தனலட்சுமி, மோகன்ராஜ் மற்றும் வேணுகோபாலுக்கிடையே என்னுடன் பேச்சுவார்த்தை உள்ளதா என்றால் பெரிய பேச்சு வார்த்தை இல்லை, ஏதேனும் விழா என்றால் மட்டும்தான் பேசிக்கொள்வோம். எனக்கும் தனலட்சுமி, மோகன்ராஜ் மற்றும் வேணுகோபால் இடையே ஏன் பேச்சுவார்த்தை பெரிதாக இல்லை என்றால் நான் காதல் திருமணம் செய்து கொண்டதால் இல்லை. சொத்துக்கள் பொருத்து எனக்கும் தனலட்சுமி, மோகன்ராஜ் மற்றும் வேணுகோபாலுக்கு இடையே ஏதேனும் மனஸ்தாபம் உள்ளதா என்றால் இல்லை.
7. தனலட்சுமி, மோகன்ராஜ் மற்றும் வேணுகோபால் இந்த வழக்கில் ஆஜர் ஆகி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய சித்தப்பா முருகானந்தத்திற்கும் எனக்கும் இடையே விரோதம் உள்ளதா என்றால் விரோதம் இல்லை. நான் ஏற்கனவே கையெழுத்து செய்து ஒப்புக்கொண்ட ஆவணத்தை நான் இந்த வழக்கத்திற்காக வாதி கேட்டுக் கொண்டதற்கு இணங்க கையெழுத்து செய்யவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணை முடிக்கப்படுகிறது. யார் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்பது குறித்து

சாட்சியமளிக்க எனக்கு எந்த ஒரு தகுதியும் இல்லை என்றாலும் வாதி கேட்டுக் கொண்டதற்கு இணங்க தற்போது பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

1. வேலம்மாள் புஷ்பத்திற்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட சொத்துக்களில் தற்பொழுது யார் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றால் புஷ்பம் உள்ளார். குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

POOJA KANMANI R

Digitally signed by POOJA KANMANI R
Date: 2026.06.04 16:48:14 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உடுமலைப்பேட்டை.